# இடம் பொருள் கலைஞர்

101

**மகிழவன்**

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தமிழ்நாடு வணிகர் நல வாரியம்!**



# தமிழ்நாடு வணிகர் நல வாரியம்!

## வணிகப் பெருமக்களின் பாதுகாப்பு

சிறுவியாபாரம் செய்யும் வியாபாரிகளை ஊக்குவிக்கவும் அவர்களைப் பாதுகாத்து பல்வேறு உதவிகளைச் செய்திடவும், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறது.

அந்த வகையில், 1967-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக ஆட்சி அமைத்தபோது, கழக அரசு அமைவதற்கு முன்பு '10 ஆயிரம் ரூபாய்க்குக் கீழ், விற்பனை செய்கிற வியாபாரிகள் விற்பனை வரி கட்ட வேண்டியதில்லை' என்ற சலுகையை மாற்றி அமைத்து, '15 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்கிறவர்கள் விற்பனை வரி கட்ட தேவையில்லை' என்று அறிவித்தார், பேரறிஞர் அண்ணா.

### அண்ணாவின் தொடர்ச்சியாக கலைஞர்

அண்ணாவிற்குப் பின்பு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 25 ஆயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்கிற சிறு வணிகர்கள், விற்பனை வரி கட்டத் தேவையில்லை என்று அறிவித்தார். 110-க்கும் மேற்பட்ட பொருள்களுக்கு விற்பனை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.


இதன் தொடர்ச்சியாக, 'சிறு வணிகர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், 'தமிழ்நாடு வணிகர் நல வாரியம்' அமைக்கப்படும்' என்று, 1975-ஆம் ஆண்டின் இறுதியில் கலைஞர் அறிவித்தார். ஆனால், 1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையைத் தொடர்ந்து கழக அரசு கலைக்கப்பட்டதன் காரணமாக, வணிகர் நல வாரியத்தை அமைக்க இயலவில்லை.

### தமிழ்நாடு வணிகர் நல வாரியம்

1989-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில், 'நலிவுற்ற வணிகர்கள் புனர்வாழ்வு பெற்றிட, கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்ட வணிகர் நல அமைப்பு உருவாக்கப்படும்' எனத் தேர்தல் வாக்குறுதி அளித்து, மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள், 25-09-1989 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி, இந்தியாவில் முதன்முதலாக தமிழ்நாட்டில் வணிகப் பெருமக்களின் நலனுக்காக 'தமிழ்நாடு வணிகர் நல வாரியம்' அமைத்தார். தொடங்கப்பட்ட ஓராண்டுக்குள் 35 ஆயிரத்து 352 வணிகர்கள் ஆயுட்கால உறுப்பினர்களாக, தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் சேர்க்கப்பட்டனர்.

### நலத்திட்டங்கள்

வணிக நல வாரியத்தில் உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் நலனைக் கருத்தில் கொண்டு, 'கல்வி உதவித்தொகை', 'குடும்ப நல உதவித்தொகை', 'அறுவை சிகிச்சைகள்' மற்றும் 'மருத்துவத் தேவைகளுக்கான உதவித்தொகை', 'விபத்துக்கால உதவித்தொகை', 'திருமண உதவித்தொகை', 'நலிவுற்ற வணிகர்களுக்கு உதவித்தொகை', 'விளையாட்டில் சிறந்து விளங்கும் வணிகர்களின் வாரிசுகளுக்கு ஊக்கத்தொகை' எனப் பல்வேறு நலத்திட்டங்கள், தமிழ்நாடு வணிகர் வாரியத்தின் வழியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



தமிழ்நாடு அரசு ஆரம்ப காலத்தில் வணிகர்களுக்காக நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கும், வாரியத்தின் நிர்வாக செலவினங்களுக்காகவும் ஒதுக்கிய 2 கோடி திரட்டு நிதி, பின்னர் 5 கோடியாக உயர்த்தப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படும் வணிகர்களின் சேர்ப்புத் தொகைக்கு இணையாக அரசிடமிருந்து பெறப்படும் மானியத் தொகையும் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு, அதன் ஈட்டுத் தொகையில் 35 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய் பெறப்பட்டது. அதன் வழியாக, 17.10.2000 வரை கல்வி ஊக்கத் தொகையாக 49 பேருக்கு 1,06,000 ரூபாயும், மருத்துவ உதவித்தொகையாக 15 பேருக்கு 3 லட்சத்து 41 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டன.

தீ விபத்துக்கான உதவித்தொகையாக 27 பேருக்கு ஒரு லட்சத்து 3 ஆயிரம் ரூபாயும், மாணவர்கள் ஊக்கத் தொகையாக 6 மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும், குடும்ப நல உதவியாக 118 குடும்பங்களுக்கு 37 லட்சத்து 69 ஆயிரம் ரூபாயும், மாநில விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வணிகரின் வாரிசு ஒருவருக்கு 5,000 ரூபாய் என 217 நலிவுற்ற வணிகர்களுக்கு 47 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தால் வழங்கப்பட்டது.

### உயர்த்தப்பட்ட உதவித்தொகை

2.07.2007 முதல் வணிகர் நல வாரியத்தால் குடும்ப நல உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்த 20,000 ரூபாய், 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. திட்டத்தின் வழியாக 2011-ஆம் ஆண்டு வரை 54 உறுப்பினர்களுக்கு 14.10 லட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. மேலும், இதய அறுவை சிகிச்சை, புற்றுநோய் அறுவை சிகிச்சை, கீமோதெரபி, ரேடியோதெரபி, டயாலிசிஸ் சிகிச்சைகளுக்கு வழங்கப்பட்டு வந்த 15 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு, 20 ஆயிரம் ரூபாயும் உதவித்தொகையாக வழங்க முடிவு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் கீழ், 2011-ஆம் ஆண்டு வரை 6 உறுப்பினர்களுக்கு ரூபாய் 1.62 லட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

> **சிறுவணிகர்கள் குறித்து, சிந்திக்கிற அரசாக, அவர்கள் நலனில் அக்கறை காட்டும் அரசாக, தி.மு.க அரசு அன்றைக்கும் இருந்தது, இன்றைக்கும் இருக்கிறது, என்றைக்கும் இருக்கும்!**

உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு கல்லூரிப் படிப்பிற்காக வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை 3,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. தொழில்கல்விக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் பத்தாயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது. திட்டத்தின் கீழ் 14 உறுப்பினர்களுக்கு 98 ஆயிரம் ரூபாய் உதவி தொகையாக வழங்கப்பட்டது. நலிவுற்ற வியாபாரிகள் கூட்டுறவுத் தொழிற்கூடங்களில் தயார் செய்யப்படும் பெட்டிக்கடை அல்லது மூன்று சக்கர மிதிவண்டிகள் வாங்க 10,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படுகிறது. வாரியத்தின் திரட்டு நிதியை 5 கோடி ரூபாயிலிருந்து 10 கோடி ரூபாயாக உயர்த்தி, அரசாணை பிறப்பிக்கப்பட்டு, மேற்படித்தொகை, ஒன்றிய ரிசர்வ் வங்கியில் தமிழ்நாடு அரசின் சார்பில் வணிகர் நல வாரியத்தின் கணக்கில் பொது வைப்பு நிதியாக வரவு வைக்கப்பட்டது. 1989-ஆம் ஆண்டு முதல் 31.05.2021 வரை 8,873 உறுப்பினர்களுக்கு 3 கோடியே 5 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் நலத்திட்ட நிதியாக வழங்கப்பட்டது.

வாரியத்தின் கீழ் நடைபாதை வியாபாரிகள் மட்டுமல்லாமல், ஆண்டு மொத்த விற்பனைத் தொகை 40 லட்சத்துக்கு குறைவாக உள்ள எந்த ஒரு வணிக நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பங்குதாரர்களும், தொழில் வரி உச்ச வரம்புக்கு உட்பட்ட, உள்ளாட்சி நிறுவனங்களைச் சார்ந்தவர்களும் 500 ரூபாய் மட்டும் கட்டணம் செலுத்தி, உறுப்பினராகும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### வணிகர் நலன் காக்கும் திராவிட மாடல் அரசு

கோவிட்- 19 பெருந்தொற்றின் காரணமாக, தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் வாழ்நாள் உறுப்பினர் ஆவதற்குப் பதிவுக் கட்டணம் ரூபாய் 5,000 செலுத்துவதில் இருந்து 15-07-2021 முதல் 31-03-2022 வரை விலக்கு அளிக்கப்பட்டு, 40 ஆயிரத்து 994 வணிகர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். மேலும் மறைந்த உறுப் பினரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப நல உதவித்தொகை ஒரு லட்சம் ரூபாயில் இருந்து 3 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

வணிகத் தளங்களில் ஏற்படும் தீ விபத்திற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையும் 5,000-இல் இருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. வணிகர் நல வாரிய நிர்வாக உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 20-இல் இருந்து 30-ஆக உயர்த்தப்பட்டது. பதிவு பெற்ற வணிகர்களின் எண்ணிக்கை 88, 219-ஆக உயர்ந்துள்ளது. இணைய வழியில் உறுப்பினர் சேர்க்கை நடைமுறையும் தொடங்கப்பட்டுள்ளது. சிறுவணிகர்கள் குறித்து, சிந்திக்கிற அரசாக, அவர்கள் நலனில் அக்கறை காட்டும் அரசாக, தி.மு.க அரசு அன்றைக்கும் இருந்தது, இன்றைக்கும் இருக்கிறது, என்றைக்கும் இருக்கும்!

**...வலம் வருவோம்**

---

## இனியாவது புரிந்து கொள்வோமா?




தனிப் பெற்றோரானவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, குழந்தை வளர்ப்பில் அவர்களுக்குப் பல்வேறு சவால்கள் உள்ளன. அதுகுறித்து, இந்தியச் சூழலில் பெரும் விவாதங்களோ, உரையாடல்களோ நடைபெறவில்லை. அப்படியொரு விவாதத்தைத் தொடக்கி வைக்கிற நூலாக உருவாகியிருக்கிறது 'இனியாவது புரிந்துகொள்வோமா?'. சிறார் பரப்பில் தொடர்ந்து செயல்பட்டு வரும் இனியனின் தொகுப்பு நூலாக உருவாகியுள்ளது.

தனிப்பெற்றோர் மற்றும் அவர்களின் குழந்தைகள் மீதான புற அழுத்தங்கள், சட்ட வாய்ப்புகள் குறித்து, திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் அருள்மொழி அவர்களும், உளவியல் ரீதியான உரையாடலாக மனநல மருத்துவர் சிவபாலன் அவர்களும் எழுதியிருக்கும் கட்டுரைகள். மற்றவர்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியவை.

வளர்ந்த நாடான அமெரிக்காவில் மூன்றில் ஒரு பெற்றோர் தனிப் பெற்றோராக உள்ளனர். அவர்களில் 85% பெண்களாக இருக்கிறார்கள் என்பது, இந்நூல் தரும் தகவல். இந்தியாவிலும் தனிப்பெற்றோரில் ஆண்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம்தான். ஆக, உலகெங்கும் குழந்தை வளர்ப்பு என்பது பெண்களின் சமூகப் பொறுப்பாகவே இருக்கிறது. கிராமங்களில், நகரங்களில், தேயிலைத் தோட்டங்களில், அகதிகள் முகாம்களில், பழங்குடியின மக்களில் என தனிப்பெற்றோரின் பிரச்னைகளைப் பல மட்டங்களில் இருந்து அணுகுகிறது, இந்நூல்.

அதிலும் குறிப்பாக, தனிப்பெற்றோரின் பெண் குழந்தைகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை, சொந்த அனுபவங்களில் இருந்தே விவரித்திருப்பது, வாசிப்போரின் ஆழ்மனதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. அவசியமான உரையாடலாக அமைந்திருக்கும் 'இனியாவது புரிந்துகொள்வோமா? தனிப் பெற்றோர் - குழந்தைகள்' நூல், 'நாடற்றோர் பதிப்பகத்தின்' வெளியீடாக வெளிவந்துள்ளது.

நூலைப் பெற: 94435-36779. விலை: ரூ.270

---

## :.ப்ளாஷ்பேக்



### நெஞ்சை விட்டு அகலாத நெருக்கடி நிலை!



து.கோவிந்தசாமி

1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை காலகட்டத்தின் போது, கழகத் தலைவரைச் சந்திக்கக் கடும் கட்டுப்பாடுகள் இருந்தன. கிளைக் கழக நிர்வாகிகள் ஏதாவது ஒரு வகையில், தலைவரைச் சந்தித்து விடுவோம். அப்படி ஒரு முறை, கோபாலபுரம் சென்று நெருக்கடி நிலை வழக்கு நிதி அளித்து, தலைவருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். இன்னும் நெஞ்சை விட்டு அகலாத மறக்க முடியாத காலகட்டம் அது.

**- து.கோவிந்தசாமி, முன்னாள் வட்டச் செயலாளர், தண்டையார்பேட்டை, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### கொடி வரலாறு!

1944-ஆம் ஆண்டிலேயே 'நீதிக்கட்சி', 'திராவிடர் கழக'மாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தாலும், புதிதாக கொடி உருவாக்கப்படவில்லை. நீதிக்கட்சியின் தராசுக் கொடியே பயன்படுத்தப்பட்டு வந்தது. 1946-ஆம் ஆண்டு பிப்ரவரியில், கரூர் மாவட்டம், தவிட்டுப்பாளையத்தில் திராவிடர் கழக மாநாட்டில்தான், இன்றைய கருப்பு- சிவப்புக் கொடி முதன்முதலாக ஏற்றப்பட்டது. ரத்தினம் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட இக்கொடியை, சண்முகவேலாயுதம் வடிவமைத்தார்.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

708

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131